RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தமிழர்களின் வாழ்வில் வெற்றிலையின் பங்கு

த. காளீஸ்வரி [அ, *]

[அ] சூலூர் - கோயம்புத்தூர் - 641402, தமிழ்நாடு, இந்தியா.

# Role of betel leaf in the lives of Tamils

T. Kaliswari [a, *]

[a] Sulur-641402, Coimbatore, Tamil Nadu, India

* Corresponding Author: kaleeswarivarathu@gmail.com

Received: 07-04-2024
Revised: 23-06-2024
Accepted: 07-07-2024
Published: 01-08-2024

Check for updates

## ABSTRACT

Betel leaf is an auspicious item in the life and culture of the Tamils. We have used it as an auspicious object for the whole of India. Its contribution to Kaivatya and Siddha systems of medicine is immense. The main chemical substance found in betel leaf is considered as a curative and a symbol of good deeds in cultural customs. The uses of such betel leaves, their medicinal properties and scientific and philosophical explanations form the subject of the article.

**Keywords:** Tamils, betel leaf, Kaivatya, Siddha

## முன்னுரை

மக்களின் நம்பிக்கைகள்இ பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படுவது பண்பாடாகும். தமிழர்கள் உணவு, உரை,குடியிருப்பு, வழிபாடு, தொழில, மொழி என்று பல்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இப்பழக்க வழக்கங்கள் மரபு வழியாகப் பின்பற்றப்பட்ட போது பண்பாடாக அடையாளப்படுத்தப்பட்டன. அவ்வாறு தமிழர் தம் பழக்க வழக்கங்ககளை ஆராய்கின்ற நிலையில் தனித்துவமான பண்பாட்டைக் கொண்ட இனமாக அடையாளப்படுத்த முடியும். அவர்களின் நம்பிக்கை, உணவு சார்ந்த பழக்கங்களின் ஒன்று வெற்றிலை பயன்பாடு,வழிபாட்டிலும்,வரவேற்பிலும் மருத்துவத்திலும் தவறாது இடம்பெறும் வெற்றிலை குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

## வெற்றிலை

Betal என ஆங்கிலத்தில் வழங்கப்படும் வெற்றிலை தாம்பூலம் நாகவல்லி, வேந்தன், திரையல் எனப் பல பெயர்களில் தமிழர்களால் அழைக்கப்படுகிறது. இதன் தாவரப் பெயர் piper Berel தாவரக் குடும்பம் Piper Aceae தமிழகத்தில் வெற்றிலை தோட்டப் பயிராகவும் ஊடு பயிராகவும் பயிரிடப்படுகிறது. கொடி இனத்தைச் சேர்ந்த இச்செடியை அகத்தி மரத்தில் படரவிட்டு வளர்ப்பார்கள். வெற்றிலை பயிரிடப்படும் இடம் ‘வெற்றிலை கொடிக்கால என அழைக்கப்படுகிறது. மிதமான வெப்பம், மண்வளம், தண்ணீர் வசதி உள்ள இடங்களில் வெற்றிலை பயிரிடப்படுகிறது. இதன் பூர்வீகம் மலேசியா என்றாலும் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் விளைகிறது. வெற்றிலைக்கு மிகப் பிரபலமான கும்பகோணம், ஆத்தூர், பரங்கிப்பேட்டை, லால்பேட்டை, பரமத்திவேலூர், பொத்தனூர், புகழூர்,

தொட்டியம் போன்ற இடங்களைக் குறிப்பிடலாம். மலையாள வெற்றிலை பச்சைப் பாக்குடன் போடுவதாகும்.

வெற்றிலை படரும் கொடியை அடிப்படையாகக் கொண்டு ஆண் வெற்றிலை,பெண் வெற்றிலை எனப் பிரிப்பர். கரும் பச்சை நிறத்தில் ஆண் வெற்றிலையும் இளம் பச்சை நிறத்தில் பெண் வெற்றிலையும் காணப்படும். 15 முதல் 20 செ.மீ.நீளமும் அகலமும் கொண்டதாகக் கூர்மையான முனையுடையதாகக் காணப்படும். வெற்றிலையில் 84.4% நீர்ச்சத்தும் 3.1%புரதச் சத்தும் 0.8% கொழுப்புச் சத்தும் நிறைந்துள்ளது. இதில் கால்சியம் மற்றும் வைட்டமின் சி உள்ளதுஇ கலோரி அளவு 4.4 %நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட சவிக்கால்(Chavicol) என்னும் பொருள் இருக்கிறது. கால்சியம் இரும்புச் சத்து ஆகியன அதிகம் உள்ளதால் பல்வேறு நோய்களுக்கு மருந்தாக அமைகிறது. மருத்துவக்குணம் கொண்ட இலையாகவே ஆரம்பத்தில் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் பண்பாட்டு அடையாளமாகவும் நாகரிக நடத்தையின் தவிர்கவியலாத பொருளாகவும் மாறியது. தமிழர்களின் மிக பழங்காலத்திலேயே இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

## மருத்துவப்பயன்

வெற்றிலையைக் கிருமி நாசினியாகவும்இ விஷ முறிவுப் பொருளாகவும் மக்கள் பயன்படுத்துகின்றனர். வெற்றிலை கொடி முழுவதும் மருத்துவப் பயன் உடையது. இனிப்பும் கசப்பும் கலந்த இலை இரைப்பை குடல் ஆகியவற்றுக்கு வலுவூட்டுவதோடு, அவற்றில் தோன்றும் வலியைக் குறைக்கும் வாயில் உமிழ்நீரைச் சுரக்கச் செய்து சீரன சக்தியை அதிகரிக்கிறது. ஆகையாலேயே விருந்திற்குப் பின் வெற்றிலை போடும் பழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். குடலில் உள்ள பூச்சிகளைக் கொல்லவும்இமலம் இளக்கியாகவும் வெற்றிலை பயன்படுகிறது. காம உணர்வைத் தூண்டும் ஊட்டமும் வெற்றிலைக்கு உண்டு. இருமல், ஆஸ்துமா, தொழு நோய், மூச்சில் ஏற்படும் துர்நாற்றம, ஆண்மைக் குறைவு, மூட்டு வாதம், பசியின்மை, தொண்டையில் ஒவ்வாமையினால் வரும் பிரச்சனைகள் போன்றவற்றைக் குணப்படுத்தும் இயல்பு வெற்றிலைக்கு இருக்கிறது. மேலும்

“ஐயம் அறுங்காண் அதன்சாரம் கொண்டக்காற்

பையச் சமித்தியம்போம் பைந்தொடியே - மெய்யின்

அடியின் குணம்போகுங் காரவெற் றிலைக்குப்

படியுமுத் தோஷமிரைப் பார்”

என்னும் பாடல் வெற்றிலையின் சிறப்பை உணர்த்தும்.

## தாம்பூலம்

வெற்றிலை தரித்தல் அல்லது வெற்றிலை போடுதல் (உண்ணுதல்) தாம்பூலம் எனப்படுகிறது. அதனை தாம்பூலம் தரித்தல் என்பர். இவ்வாறு தாம்பூலம் தரிப்பதற்காக வைக்கப்படும் தட்டு தாம்பூத்தட்டு எனப்படும். வெற்றிலையை பாதுகாப்பாக வைக்கப்படும் சிறு அளவிளான பெட்டி ஒன்று இருக்கும். வெற்றிலையை செல்வமாகக் கருதினர். வெற்றிலையை லட்சுமியின் அடையாளமாகக் கருதப்பட்டதால் அவ்வாறு பெயர் பெற்றுள்ளது. தாம்பூலம் தரிப்பதற்கு வெற்றலையும் அதற்குத் தகுந்த அளவு பாக்கும் (கமுகு) சுண்ணாம்பும் தேவை. இம்மூன்றையும் சேர்த்துத் தரித்தலே தாம்பூலம் ஆகும். தாம்பூலம் தரிக்கும் முறைப் பற்றி வள்ளலார் தனது திருவருட்பா ஆறாம் திருமுறை உரைநடைப் பகுதி - நித்ய கரும விதியில் கீழ்க் காணுமாறு கூறியுள்ளார்.

“மேற்றலையும் கீழ்க்காம்பும் வெந்நரம்பும் தவெண்பல்லைத்

தீத்தாமல் வெற்றிலையைத் தின்றாக்கால் - மாற்றலரை

வெல்லப்போர் செய்யும் விறல்நெடுமா லாயிடினும்

மெல்லப் போய் நிற்கும் திரு

காலை பிளவதிகம் கட்டுச்சி நீறதிகம்
மாலை இலையதிகம் வாணுதலே - சாலவே
ஆம்போது நீதிறக்க லாகாது சொன்னேன் கேள்
தாம்பூலங் கொள்வார் தமக்கு.

வெற்றிலைக்கு முன்னே வெறும்பிளவை நாவிலிட
நற்றிருவா மங்கை நடப்பளே - வெற்றிலையை
முன்னிட்டுப் பின்பிளவை வேய்வரே யாமாயின்
மன்னரைப் போலாவார் மகிழ்ந்து"

என்னும் பகுதியால் அறியலாம். மேலும் தாம்பூலம் இல்லத்தார்க்கு மட்டுமே துறவறத்தார்க்கு இல்லை எனவும் பேசியுள்ளனர். இதனால் வெற்றிலை போடுதல் தமிழரிடத்து மிகப் பழங்காலத்திலே இருந்துள்ளதையும் சமூகம் ஏற்றுக் கொண்ட நல்ல பழக்க வழக்கமாகக் கருதப்பட்டுள்ளதையும் அறிய முடியும்.வெற்றிலை போடுகிற போது வரும் முதல் மற்றும் இரண்டாம் எச்சிலை துப்பிவிட வேண்டும். மூன்றாம் நான்காம் மற்றும் ஐந்தாம் முறை வருகின்ற எச்சிலை விழுங்கிட வேண்டும். அதன் பின் சக்கைதை துப்பிட வேண்டும் என்கிறார் வள்ளலார்.

## பண்பாட்டில் வெற்றிலை

தமிழர்தம் பண்பாட்டில் வெற்றலை தலையாய இடத்தில் வைத்துப் போற்றப்படுகிறது. வரவேற்றல் மரபில் யாரையேனும் அழைக்க வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பது மரபு. வந்தமைக்கு நன்றி தெரிவிக்கவும் வெற்றிலை தாம்பூலம் அளிக்கப்படுகிறது. வரவேற்றலுக்குப் பயன்பட்ட வெற்றிலை பாக்கு தெய்வத்தை வருவிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது நம்பிக்கையாக மாறி இன்று தெய்வ வழிபாட்டில் தலையாய இடத்தைப் பிடித்துவிட்டது. ஆகையாலேயே வெற்றிலையின் நுனியில் லட்சுமியும்இநடுவில் சரஸ்வதியும் காம்பில் பார்வதியும் இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். பின் நிச்சயம் செய்தலிலும் வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்வதன் வழி திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. அதனை நாட்டார் வெற்றிலை பாக்குக் கைமாற்றுதல் என்பர்.இங்கு வெற்றிலை சத்தியத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. மதுரை அருகே சாதி மதச் சண்டைபை; போக்கும் விதமாக வெற்றிலை பிரி திருவிழா கொண்டாடப்படுகிறது.இவ்வாறு வெற்றிலை வரவேற்பு மரபிலும் வழிபாட்டிலும் பெண்களுக்கான மருத்துவப் பொருளாகவும் சத்தியத்தின் அடையாளமாகவும் தமிழர்களால் இன்றளவும் பயன்படுத்தப்படுகியது.

## வெற்றிலை குறித்த நம்பிக்கைகள்

இளம் வெற்றிலையை ராமனுக்கு யார் மடித்துக் கொடுப்பார்கள் என்று அசோக வனத்தில இருந்த சீதை வருந்திய செய்தியைக் கம்பராமாயணம் பதிவு செய்துள்ளது. உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலை எல்லாம் எம்பெருமான் என்று கண்களில் நீர்மல்கி மனம் உருகிப் பாடுகிறார் நம்மாழ்வார். இவ்வாறு மிகப் பழங்காலந்தொட்டே தமிழர்களின் வாழ்விலும் பண்பாட்டிலும் தொடரும் வெற்றிலை குறித்துப் பல்வேறு நம்பிக்கைகள் காணப்படுகின்றன. மங்களப் பெருளாகக் கருதப்படும் வெற்றிலை அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன் வைத்துப் போற்றப்படுகிறது. வெற்றிலையில் மை இட்டு மாந்திரீகம் செய்யப்படும் என்பதால் வெற்றிலையைத் தனியாகப் பிறருக்குத் தருவதில்லை. நாட்டார் வழிபாட்டில் வெற்றிலையில் பூக்கட்டிப் போட்டுக் குறி கேட்கும் வழக்கம் இன்றும் உள்ளது. வெற்றிலை மடித்துக் கொடுப்பவர் அன்பை வாய் சிவத்தல் வாயிலாக மதிப்பிடும்

வழக்கமுள்ளது.சுண்ணாம்பு இறப்பின் அடையாளம் ஆகையால் சுண்ணாம்பைத் தனியே தரக்கூடாது என்றும் வெற்றிலையுடன் இணைத்தே தர வேண்டும் என்றும் நாட்டார் நம்புகின்றனர். இறந்தவரை வீட்டின் மூலையில் அமர வைக்கும் போது கையில் வெற்றிலை பாக்கு வைப்பர். இறந்தவர் தெய்வ நிலைக்கு உயர்ந்துவிட்டார் என்ற நம்பிக்கையில் தெய்வங்களுக்குச் செய்யும் அனைத்துச் சடங்குகளையும் செய்யும் வழக்கம் தமிழரிடத்துக் காணப்படுகிறது.'செத்தவன் கையில் வெத்தல பாக்குக் கொடுத்த மாதிரி' என்று சொல்லும் பழக்கம் இன்றும் மக்களிடம் காணப்படுவதே அதற்குச் சான்றாகும். குpராமங்களில் நடக்கும் அனைத்து மங்கள நிகழ்வுகளின் இறுதியில் ஊர்த்தலைவரின் மனைவி நிகழ்ச்சி நடக்கும் வீட்டின் சார்பாக வெற்றிலை பாக்கு விளம்பு வழக்கம் இன்றும் தென் மாவட்டங்களில் காணப்படுகிறது.வரவேற்று நன்றி தெரிவிக்கும் நம்பிக்கையாகவேன அதைப் பார்க்க முடியும்.தென் மாவட்டங்களில் பெண்ணிற்குப் பரிசம் போட்டுலிட்டு (நிச்சயம்) பெண் அழைத்து வருகின்ற போது வெற்றிலையில் குறிப்பிட்ட தொகையை வைத்துப் பெண்ணின் தாயிடம் வழங்குதல் மரபாக உள்ளது.வெற்றிலையில் பணத்தை வைத்துத் தருதல் பெண்ணைப் பெற்றவளுக்கு நன்றி பாராட்டல் என்னும் நம்பிக்கை அடிப்படையில் அமைவதாகும். ஊர்ப்பொதுக்கூட்டம் நிறைவு பெற்றதன் அடையாளமாக ஊர்த்தலைவர் வெற்றிலை பாக்கை அனைவரின் முன்னிலையில் வைக்கும் வழக்கம் உள்ளது. தாங்கள் தந்த தீர்ப்பு உண்மை என்பதை சுட்டும் வகையில் இதனை வைப்பர்.

## முடிவுரை

வெற்றிலை மிகப் பழங்காலம் தொட்டே தமிழர்களின் மருத்துவப் பயன்பாட்டில் தொடங்கி வாழ்வோடும் நம்பிக்கையோடும் கலந்துவிட்ட ஒன்றாகும். வெற்றிலை போடுகிற போது வாசனை பொருட்களைச் சேர்த்தனர் பின்னர் ஏற்பட்ட வடவர் தொடர்பால் புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்களைச் சேர்த்துப் போடும் வழக்கம் பரவியது. ஆகையால் வெற்றிலை போடுதல் ஒழுக்கமற்ற செயலாகக் கருதப்பட்டது. தமிழர் பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் அழித்தொழிக்க நினைக்கும் வடவர் செயல்களில் இதுவும் ஒன்று. வெற்றிலை மிகுந்த மருத்துவப் பயன்பாடு என்பதோடு தமிழர்பளின் பண்பாட்டு அடையாளம் என்பது இங்கு நினைக்கத்தக்கது.

## References


பன்னிரு திருமுறைகள், இராச. வசந்தகுமார், நிறுவன வேந்தர், கற்பகம் பல்கலைக்கழகம், பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம், ஈச்சநாரி, கோவை - 21, முதல் பதிப்பு -2014.

தமிழியல் பரிமாணங்கள் (தொகுதி 5) மலர்மதி பதிப்பகம்: கலைஞன் பதிப்பகம். முதல் பதிப்பு- 2007

சிலப்பதிகாரம், ப.சரவணன், சந்தியா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு 2005

நாட்டுப்புற இயல் சு.சக்திவேல், தமிழ் *நாட்டுப்புற இயல் ஆய்வு*. பதிப்பாளர். சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் , 1979.

நாட்டார் வழக்காற்றியல் லூர்து தே(இணையம்)



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License